1972 ஆகஸ்ட் 12]

## இசைக் கருவிகள் உற்பத்தி

*100 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூரில் கூட்டுறவுத் துறையில் சங்கீதக் கருவிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று இயங்கி வருகின்றதா?

(இ) அங்கு எந்தெந்த இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன?

(உ) இதற்கு கடன் அல்லது மானியத்தொகை ஏதேனும் அரசு வழங்கி வருகிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம். இத்தொழிற்சாலை ஒரு தொழிற் கூட்டுறவுச் சங்கமாக இயங்கி வருகிறது.

(இ) அங்கு வீணை, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்ற இசைக்கருவிகள் செய்யப்படுகின்றன.

(உ) இச்சங்கத்திற்கு அரசு கடனும் மானியத்தொகையும் வழங்கியுள்ளது.

**திரு. என். கிட்டப்பா :** தமிழ்நாட்டின் பண்டைய இசைக் கருவியாகிய நாயனக் கருவி செய்வதற்கும் அரசு ஆக்கம் அளிக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே போதுமான அளவு இருக்கிறது. கூட்டுறவுச் சங்கம் செய்ய முன்வருமானால் அதற்கு உதவி செய்யலாம்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** சிதார், புல்புல்தாரா போன்ற கருவிகளும் அங்கே தயாரிக்கப்படுகின்றனவா? அவைகள் அங்கே தயாரிக்கப்படவில்லையென்றால் இனிமேலாவது தயாரிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எது எது வியாபாரம் நடக்குமோ அதையெல்லாம் அங்கே செய்வார்கள். இப்பொழுது அங்கே ஆர்மோனியம், சுருதிப் பெட்டி, மோர்சிங், புல்புல்தாரா போன்ற இசைக் கருவிகளை வாங்கி விற்பனை செய்கிறார்கள். வீணை, தம்புரா, மிருதங்கம், தபேலா, கஞ்சிரா போன்றவைகளை அங்கே அவர்கள் உற்பத்தி செய்கிறார்கள்.

## கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள்

*101 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் தொழில் கூட்டுறவு துறையில் டீ பாக்டரிகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) அவைகளில் லாபத்தில் நடப்பவை எத்தனை?